## கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு III (நிகழ் அலை ஊடானது) - 2021

### தீங்கியற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை : **06**

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. 'கவனக் கடப்பாடு' மற்றும் ' சட்டமுரணாந்தன்மை' ஆகிய கருத்தேற்புக்கள் வெவ்வேறு சட்ட முறைமைகளின் கீழ் உருவாக்கப்பட்டு இணையாக அபிவிருத்தி செய்யப்பட்டிருப்பினும் 'சட்டமுரணாந்தன்மை' எனும் கருத்தேற்பின் பரப்பெல்லையானது 'சட்டக் கடப்பாடு' என்பதுடன் ஒப்பிடுகையில் பரந்துபட்டதாகும்.

   பொருத்தமான தீர்ப்புச் சட்டத்தின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை விமர்சனரீதியாக மதிப்பிடுக.

2. சிறியானி என்பவள் 25 வயதான ஆரோக்கியமான கர்ப்பிணிப் பெண்ணொருத்தியாவாள். தடுப்பூசிகள் மற்றும் அதனுடைய செயன்முறைகள் தொடர்பில் அவள் அதிக பயத்தினைக் கொண்டிருந்தாள். கொவிட் 19 பெருந்தொற்று மற்றும் அதனுடைய வேகமான பரவல் காரணமாக தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வதனைத் தவிர வேறு தெரிவுகள் அவளுக்கு இருக்கவில்லை. தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ச்சியாக அவள் மறுப்புச் தெரிவித்து வந்தபோதும், அவளுக்கு பாரிய ஆரோக்கிய இடர்பாடு எதுவும் இன்மையினால் தடுப்பூசியினைப் பெற்றுக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் அவளது பிரதேசத்தில் தடுப்பூசிக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி அவளுக்கு அறிவுறுத்தினார். தடுப்பூசி போடப்படுகின்ற தினத்தன்று அதன் நிமித்தமாக கவலை மற்றும் மன உளைச்சலுக்கு உள்ளான சிறியானி வித்தியாசமாக நடந்து கொண்டாள். அவளது வழக்கத்திற்கு மாறான நடத்தையினை அவதானித்த போதிலும் தடுப்பூசி தொடர்பான அவளின் பயத்தினாலேயே அவ்வாறு நடந்து கொள்கின்றாள் என

நேர்மையாக எண்ணிய வைத்திய அதிகார அவளின் கவனத்தினைத் திசை திருப்புவதற்கு முயன்றார். அவ்விதம் தடுப்பூசிக்காக அவளைத் திசை திருப்பும் பொருட்டு, சிறியானியின் கணவனுக்கு கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதால் அவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். அதனைக் கேட்டதனை உடனடுத்து சிறியானி மயங்கி விழுந்தாள். பின்னர் அவள் நரம்புமண்டலத்தாக்கத்திற்கு உள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டதுடன் அதன் விளைவாக அவளுக்கு கருச்சிதைவும் ஏற்பட்டது. அவளுக்கு கொவிட் 19 தடுப்பூசியினை வழங்கிய வைத்திய அதிகாரிக்கு எதிராக வழக்குத் தொடர சிறியானி விரும்புகின்றாள். அவளுக்கு ஏற்பட்ட கருச்சிதைவுக்கு வைத்திய அதிகாரியே பொறுப்பு என அவள் கோருகின்றாள்.

சந்தர்ப்பத்தினை விமர்சனரீதியாக ஆராய்வதுடன் அக்கூலியன் வழக்கின் பொருத்தமான சட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் உமது விடையினை எடுதுக.

3. தீங்கியற் சட்டத்தின் (Delict/ Tort) கீழான கவனயீனச் சட்டமானது வழக்காளிகளின் போட்டியிடும் அக்கறைகளினை அதன் எல்லைகளுள் வைத்திருப்பதனை மையப்படுத்தி அமைகின்றது. பல ஆண்டுகளாக, அதனை அடைவதற்கு நீதிமன்றங்கள் தனித்துவமான அணுகுமுறைகளினை வகுத்துள்ளன. பாரம்பரியமாக Rylands v Fletcher விதி மற்றும் தொல்லை என்பவற்றின் கீழ் தீங்கியலாக கருதப்பட்ட சந்தர்ப்பங்களினையும் கவனயீனச் சட்டத்தின் கீழ் உள்ளடக்கி எதிர்வுகூறலின் (foreseeability) ஊடாக கவனயீனச் சட்டத்தின் பரப்பெல்லையினை விரிவுபடுத்துவதற்கு அண்மைக்கால ஆங்கில நீதிமன்றங்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

   பொருத்தமான நியதிச்சட்ட மற்றும் தீர்ப்புச் சட்ட எடுத்துக்காட்டுக்களின் பின்னணியில் மேற்போந்த கூற்று தொடர்பில் கருத்துரைக்க.

4. கொவிட் 19 பெருந்தொற்றின் வேகமான பரவலின் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் பிற சுகாதார சேவை நிலையங்களினால் நோயாளர்களுக்கு சேவை வழங்க முடியவில்லை. கொவிட் 19 நோயாளர்களை தங்க வைப்பதற்கான அதிகரித்த வேண்டுகோளினைப் பூர்த்தி செய்யும் முகமாக மற்றைய ஹொட்டல்களோடு 'ஹொட்டல் டங்கன்' என்பதும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தனிமைப்படுத்தல் மற்றும் சுகாதார சேவை வழங்கல் நிலையமாக செயற்பட விருப்பம் தெரிவித்தது. ஹொட்டலின் மேற்குப் பகுதி புதுப்பித்தலுக்கு உள்ளாகி இருந்த போதும், கொவிட் 19 நோயாளர்களின் விரைவான அதிகரிப்பினால் அங்கும் நோயாளிகளை தங்க வைப்பதற்கு ஹொட்டல் நிர்வாகம் முடிவு செய்தது. ஹொட்டலின் நிர்வாகத் தலைவரான அதனுடைய சொந்தக்காரர் புதுப்பித்தலினை செய்து முடிப்பதற்கு ஒப்பந்தக்காரர்கள்

ஒப்புக் கொண்ட காலத்தினை அவர்கள் கடந்து விட்டதனால் அவற்றை விரைவில் முடிக்குமாறு கூறினார். உரிய நடைமுறைகளினை பின்பற்றி பணியினை முடிப்பதற்கு கால அவகாசம் தேவைப்பட்ட போதும் ஒப்பந்தக்காரர்கள் தேவையான புதுப்பித்தல் பணிகளை செய்து முடித்தனர். புதுப்பித்தல் பணிகள் நிறைவடைந்தவுடன் அதிக நோயாளிகளை மேற்குப் பகுதியில் ஹோட்டல் தங்க வைத்தது. நோயாளிகள் பலர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த ஒரு நாளில் மேற்குப் பகுதியின் சுவர் உடைந்து நேராக நோயாளிகள் மீது விழுந்தது அதன் விளைவாக சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த 35 நோயாளிகளில் 30 பேருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்ட அதேவேளையில் மிகுதி 05 பேரும் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டது. இறந்த 05 பேரும் கொவிட் 19 இன் காரணமாகவே தங்களின் வாழ்வை இழந்தார்கள் எனவும் அவர்களின் மரணத்திற்கு ஹொட்டல் பொறுப்பல்ல எனவும் ஹொட்டலின் நிர்வாகத் தலைவர் ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார். மேலும் புதுப்பித்தல் வேலைகள் ஒப்பந்தக்காரர்களினால் செய்யப்பட்டமையினால் மற்றைய 30 பேருக்கும் ஏற்பட்ட காயங்களுக்கும் தான் பொறுப்பேற்ற மாட்டேன் எனவும் நிர்வாகத் தலைவர் தெரிவித்தார்.

மேற்போந்த பிரச்சினையை ஆளுகின்ற சட்டத்தினை உமது விடையில் ஆராயுமாறு நீர் வேண்டப்படுகின்றீர். தேவையேற்படும் போது தீர்ப்புச் சட்டம் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகளை மேற்கோள் காட்டுக.

5. சாரதா என்பவள் பத்து வயதான நிலா என்பவளின் தாயாராவாள். நிலாவின் பிறந்த நாளினை கொண்டாடுவதற்காக, 'லக்கி பேக்கர்ஸ்' (Lucky Bakers) என்பதிலிருந்து 3 கிலோ கிராம் கேக்கினைப் பெறுவதற்கு 'சோல்ட் அன்ட் பெப்பர்' (Salt and Pepper ) உணவுச் செயலியில் (App) சாரதா கட்டளையொன்றை பிறப்பித்தாள். சந்தையில் மூன்று தசாப்த கால நிலைநிறுத்தலினை லக்கி பேக்கர்ஸ் கொண்டுள்ளதுடன் அந் நகரத்தில் வெதுப்பகப் பொருட்களுக்கு நன்கு அறியப்பட்டதாகவும் அது இருந்தது. 'பிறந்தநாள் வாழ்த்துக்கள் தேவதையே' (Happy Birthday Princess) எனும் ஐசிங் (icing) வாழ்த்தொன்றை கேக்கின் மீது இடுமாறு விற்பனையாளரினை சாரதா அறிவுறுத்தினாள். கேக் விநியோகிக்கப்பட்ட போது ஐசிங் வாழ்த்து இல்லாமையினை சாரதா அவதானித்தாள். அது தொடர்பில் விசாரிப்பதற்காக அவள் உடனடியாக 'சோல்ட் அன்ட் பெப்பர்' இன் அவசர இலக்கத்தினைத் (hotline) தொடர்பு கொண்டாள். தமக்கு திருப்பி அனுப்பப்படும் உணவுப் பொருட்களை ஏற்கும் கொள்கை இல்லை எனவும் அதனால் உணவுச் செயலி ஊடாக முறைப்பாடொன்றை பதிவு செய்யுமாறும் அம் முறைப்பாடு ஐந்து வேலை நாட்களுக்குள் தீர்க்கப்படும் எனவும் சாரதாவுக்கு வாடிக்கையாளர்

பராமரிப்பு நிறைவேற்று உத்தியோகத்தர் (Customer care executive) தெரிவித்தார். முறைப்பாட்டை பதிவு செய்ததன் பின்னர் ஐசிங் வாழ்த்து இல்லாத கேக்கினை சாரதா ஏற்றுக் கொண்டாள்.

பிறந்த நாள் கொண்டாட்டத்தின் பின்னர், அவர்களுடைய அயலவர்களான ரவி மற்றும் சுருதி ஆகியோருடன் கேக் துண்டுகள் சிலவற்றை சாரதா பகிர்ந்து கொண்டாள். சாரதா மற்றும் நிலாவிற்கு அடுத்த நாள் வயிற்றோட்டம் மற்றும் தோல் ஒவ்வாமை என்பன ஏற்படத் தொடங்கியமையால் அவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். நிலாவின் பிறந்த தினத்தன்று அவர்கள் உட்கொண்ட பழுதடைந்த உணவே அவர்களின் உடல்நலக் குறைவுக்கு காரணம் என வைத்தியர்கள் கண்டு பிடித்தனர். ரவி மற்றும் சுருதிக்கும் கூட இலேசான சுகவீனங்கள் இருந்தது என்பதனை சாரதா தெரிந்து கொண்டாள்.

சட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கு சாரதா விரும்புகின்றாள். அவள் உமது ஆலோசனையினை நாடுகின்றாள். தீர்ப்புச் சட்டம் மற்றும் பொருத்தமான சட்ட அதிகாரங்களின் பின்னணியில் அவளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

6. திரு. சிறிநந்தா என்பவர் 15 வருடங்களுக்கு மேலாக அமைச்சரவை அமைச்சராக சேவை ஆற்றுகின்ற அரசியல்வாதியொருவராவார். நீடித்து நிலைத்து நிற்கும் சுற்றுச்சூழல் அமைச்சின் அமைச்சராக அதனை அவர் தலைமை தாங்கிய போது, உயிர்பல்வகைமைக்காக போற்றப்படும் பிரதேசமொன்றில் காடழிப்பு தொடர்பான பிரச்சினை எழுந்தது. சுற்றுலா விடுதியொன்றை அமைப்பதற்காக வெளிநாட்டுப் பிரஜையொருவருக்கு அவ்விடத்தினை விற்பதற்கு அவர் சதி செய்ததாகவும் அதனால் நீடித்து நிலைத்து நிற்கும் சுற்றுச்சூழல் அமைச்சின் அமைச்சரென்ற வகையில் அவரின் அதிகாரத்தினை அவர் துஷ்பிரயோகம் செய்ததாகவும் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. பத்திரிகையாளர்கள் பலராலும் எழுப்பப்பட்ட வினாக்களுக்கு பதிலளிப்பதற்காக தொலைக்காட்சியில் சில தடவைகள் தோன்றிய அவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைக் கடுமையாக மறுத்தார். இருப்பினும், சில காலத்தின் பின்னர் 'அரசியல் ஊழல் மற்றும் நீடித்து நிலைத்து நிற்கும் சுற்றுச்சூழல் தொடர்பான நம்பிக்கையிழப்பு' எனும் தலைப்பிலான ஆவணப்படமொன்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் பரப்பப்பட்டது. ஆவணப்படத்தில் ஊழல் அரசியல்வாதியொருவரை சித்தரிக்கும் வகையில் 'சிறி' எனப் பெயரிடப்பட்ட தொழில்நுட்பரீதியாக உயிரூட்டப்பட்டதான (animated) கேலிச் சித்திரமொன்று காட்சிப்படுத்தப்பட்டது. அத் தொழில்நுட்பரீதியாக உயிரூட்டப்பட்டதான கதாபாத்திரம்

கோரமானதாகவும் அமைச்சர் சிறிநந்தாவிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களை பகுதியளவில் பிரதிபலிப்பதாகவும் இருந்தது. தன்னுடன் வலுவான ஒற்றுமையினைக் கொண்டுள்ளதாக அவர் நம்புகின்ற அவ் ஆவணப்படத்தினை தயாரித்தமைக்காக 'பீஸ் ஒவ் ஏர்த்' (Peace of Earth) அமைப்பிற்கு எதிராக வழக்கு தொடர திரு சிறிநந்தா தற்போது விரும்புகின்றார். அவை வெறும் குற்றச்சாட்டுக்களாக உள்ளமையினால் உண்மையற்ற இது போன்ற ஊழல் நிறைந்த செயல்களுக்கு அவர் பொறுப்பானவர் எனப் பொதுமக்களால் அடையாளம் காணப்படுவார் என அவர் கவலையடைகின்றார்.

'பீஸ் ஒவ் ஏர்த்' (Peace of Earth) அமைப்பினால் அவர்களை நீதிமன்றில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான நீர் அமர்த்தப்பட்டுள்ளீர் என கருதுக. இச் சட்டப்பிரிவினை ஆளுகின்ற ஆங்கில மற்றும் உரோம டச்சுச் சட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களின் பின்னணியில் இப் பிரச்சினையை ஆராய்க. தேவையேற்படும் போது தீர்ப்புச் சட்டத்தினை மேற்கோள் காட்டவும் நீர் வேண்டப்படுகின்றீர்.

(வினா ஒவ்வொன்றும் 100 இற்கு புள்ளியிடப்படும்)

**************